Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 100/2022**

**Deposition of PW. 1 (LW.1)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | பாலமுருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | ராஜு | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | செவணக்கிரையான் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 43/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

(எதிரி ஆஜர் )

Crl.M.P.No.701/2025- குவிமுச பிரிவு 311 ன் கீழ் எதிரி தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டு 05.11.2025 அன்று மனு அனுமதிக்கப்பட்டதன் பேரில் சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு விசாரிக்கப்படுகிறார்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொல்லியுள்ள சங்கதிகளை தான் போலிஸ் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். புகாரை யார், எங்கு வைத்து, எப்போது எழுதினார்கள் என்றால் புகாரை நான் தான் காவல்நிலையத்தில் வைத்து விபத்து நடந்த அன்றே எழுதினேன். புகாரை நீங்கள் எழுதியிருந்தீர்கள் என்றால் நீங்களும், உங்களுடன் பயணம் செய்த நபரும் என்று சொல்லி தான் எழுதியிருக்க வேண்டும் என்று சொன்னால் சரிதான். நீங்கள் கொடுத்த புகார் மனுவில் நானும் சம்பவத்தின்போது சென்றேன் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். உங்களிடம் காட்டப்படும் புகாரில் வள்ளிமுத்து மகன் செல்வராஜ் மற்றும் அவரது அண்ணன் பாலமுருகன், அம்மாவாசை மகன் சுந்தரமூர்த்தி, அவரது அம்மா ராஜாத்தி, பழனிச்சாமி மகன் இளையராஜா, அவரது அண்ணி தேவி, பழனியப்பன் மகன் திருமுருகன், முருகன் மகன் செந்தில்குமார், ராஜு மகன் பாலமுருகன் மற்றும் சிலரும் சேர்ந்து கிளம்பி சென்றுகொண்டிருக்கும்போது என்று குறிப்பிடப்பட்டிருக்கிறது என்றால் சரிதான்.

புகாரில் நீங்கள் வாகனத்தில் எந்த இடத்தில் உட்கார்ந்து இருந்தீர்கள் என்று புகாரிலும், போலிஸ் விசாரணையிலும் குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். நீங்கள் பயணம் செய்த வாகனத்தில் எத்தனை நபர்கள் சென்றார்கள் என்ற விபரம் குறிப்பிட்டு

சொல்லவில்லை என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக போலிசார் உங்களை எப்போது விசாரித்தார்கள் என்றால் விசாரித்தாரர்கள் எப்போது என்று தெரியவில்லை.

போலிஸ் விசாரணையிலும் காயம்பட்ட நபர்களையும், இறந்த நபர்களையும் திண்டுக்கல் அரசு மருத்துமனைக்கு அனுப்பி வைத்தோம் என்று தான் கூறப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றால் சரிதான். முதல் விசாரணையில் நீங்கள் தான் அவர்களை திண்டுக்கல் அரசு மருத்துவமனைக்கு அழைத்துச் சென்றீர்கள் என்று சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் மருத்துவமனைக்கு செல்லவில்லை என்றும், அவ்வாறு சென்றிருந்தால் வாகனத்தில் சென்ற நபர்களின் பெயர்களை குறிப்பிட்டிருப்பீர்கள் என்றால் சரியல்ல.

எதிரியின் பெயர், விபரம் யாரிடம் கேட்டு தெரிந்துகொண்டீர்கள் என்றால் போலிசாரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். மறுநாள் போலிசாரிடம் கேட்டு தெரிந்துகொண்டேன். சம்பவத்தன்று எதிரியை நீங்கள் பார்த்தீர்களா என்றால் பார்க்கவில்லை. புகாரில் மாலை மற்றும் வலது பக்கம் ஆகிய சொற்கள் இடையில் சேர்க்கப்பட்டுள்ளது என்றால் சரிதான். நீங்கள் வாகனத்தின் எந்த பகுதியில் இருந்தீர்கள் என்றால் இடது பக்கத்தில் நின்றுகொண்டிருந்தேன். நீங்கள் சென்ற வாகனத்தின் பின் கதவு திறந்திருந்தது என்றால் இல்லை மூடிப்பட்டிருந்தது. நீங்கள் சென்ற வாகனம் வேகமாக சென்று பிரேக் அடித்ததால் தான் அதில் இருந்த நபர்கள் கீழே விழுந்தார்கள் என்றால் சரிதான்.

நீங்கள் சென்ற வாகனம் பயணிகளை ஏற்றிச் செல்லும் வாகனம் இல்லை என்றும், வேகமாக சென்று நீங்கள் தான் விபத்தை ஏற்படுத்திக்கொண்டீர்கள் என்றும், இறந்த நபர்கள் உங்கள் ஊர்க்காரர்கள் என்பதால் அவர்களுக்கு இழப்பீடு பெறவேண்டும் என்பதற்காக பொய்சாட்சியம் அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் சம்மந்தம் இல்லை என்று சொன்னால் சரியல்ல.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 100/2022**

**Deposition of PW.3 (LW.3)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | கர்ணன் | ஜாதி | : | |
| த/பெ | : | அம்மாவாசை | தொழில் | : | கூலி வேலை |
| கிராமம் | : | செவணக்கிரையான் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 50/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் செவணக்கிரையான்பட்டியில் குடியிந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 10 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் செம்பட்டியிலிருந்து எரியோட்டிற்கு விசேசத்திற்காக சென்றபோது தருமத்துப்பட்டி பாலத்திற்கு அருகில் நாங்கள் சென்ற 407 வாகனத்தில் எதிரே வந்த டிராவல்ஸ் வாகனம் மோதிவிட்டது. நான் சம்பவத்தின்போது 407 வாகனத்தில் பின்பகுதியில் கூட்டத்திற்கு நடுவே உட்கார்ந்தியிருந்தேன். நான் கீழே உட்கார்ந்து இருந்ததால் சத்தம் மட்டும் தான் கேட்டது. விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. சத்தம் கேட்டு நான் பார்த்தபோது என்னுடன் பயணம் செய்த 25, 30 நபர்களில் இரண்டு நபர்கள் மட்டும் இறந்துவிட்டார்கள். விபத்து நடந்தவுடன் வாகனம் வேகமாக மோதிக்கொண்டதில் இரண்டு நபர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். அந்த நபர்கள் தான் இறந்துவிட்டார்கள். எதிரியை நான் பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

407 வாகனத்தில் 30 நபர்களுக்கு மேல் நீங்கள் சென்றீர்கள் என்றால் சரிதான்.

விபத்து எப்படி ஏற்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 100/2022**

**Deposition of PW.4 (LW.4)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | இளையராஜா | ஜாதி | : | |
| த/பெ | : | பழனிச்சாமி | தொழில் | : | கொத்தனார். |
| கிராமம் | : | செவணக்கிரையான் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 37/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் செவணக்கிரையான்பட்டியில் குடியிந்துகொண்டு கொத்தனார் வேலை செய்து வருகிறேன். கடந்த 12 வருடங்களுக்கு முன்பு ஒரு நாள் செவணக்கிரையான்பட்டியில் இருந்து எரியோட்டிற்கு விசேசத்திற்காக சென்றபோது தருமத்துப்பட்டி பாலத்திற்கு அருகில் நாங்கள் சென்ற 407 வாகனத்தில் எதிரே வந்த டிராவல்ஸ் வாகனம் மோதிவிட்டது. நான் சம்பவத்தின்போது 407 வாகனத்தில் பின்பகுதியில் கூட்டத்திற்கு நடுவே நின்றுகொண்டிருந்தேன். அந்த விபத்தில் எனக்கு வலது கை மணிக்கட்டிற்கு கீழ் பெரிய காயம் ஏற்பட்டது. திண்டுக்கல் அரசு மருத்துமனையில் 38 நாட்கள் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். கையில் எனக்கு அறுவைசிகிக்சை செய்து பிளேட் வைத்தார்கள். விபத்து எவ்வாறு ஏற்பட்டது என்று நான் பார்க்கவில்லை. சத்தம் கேட்டு நான் பார்த்தபோது என்னுடன் பயணம் செய்த 25 நபர்களில் இரண்டு நபர்கள் மட்டும் இறந்துவிட்டார்கள். விபத்து நடந்தவுடன் வாகனம் வேகமாக மோதிக்கொண்டதில் சுந்தரமூர்த்தி, செல்வராஜ் ஆகிய இரண்டு நபர்கள் கீழே விழுந்துவிட்டார்கள். அந்த நபர்கள் தான் இறந்துவிட்டார்கள். எதிரியை நான் பார்த்ததில்லை. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். எதிரியின் பெயர், விபரம் உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான். 407 வாகனத்தில் 30 நபர்களுக்கு மேல் நீங்கள் சென்றீர்கள் என்றால் சரிதான். விபத்து எப்படி ஏற்பட்டது என்று உங்களுக்கு தெரியாது என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor

Deposition of Witness
IN THE COURT OF DISTRICT MUNSIF CUM JUDICIAL MAGISTRATE
ATHOOR

**CC.No. 100/2022**

**Deposition of PW.5 (LW.5)**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமுருகன் | ஜாதி | : | |
| த/பெ | : | பழனியப்பன் | தொழில் | : | கூலி வேலை. |
| கிராமம் | : | செவணக்கிரையான் பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | திண்டுக்கல் மேற்கு | வயது | : | 52/2026 |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 10.02.2026.

(எதிரி ஆஜர் )

**முதல் விசாரணை**

நான் செவணக்கிரையான்பட்டியில் குடியிந்துகொண்டு கூலி வேலை செய்து வருகிறேன். கடந்த 12 வருடங்களுக்கு முன்பு எங்கள் ஊரில் இருந்து எரியோட்டிற்கு 407 வாகனத்தில் 20 நபர்கள் சென்றோம். அந்த வாகனத்தில் நான் பின்பக்கத்தில் வண்டி செல்லும் திசையை பார்த்து உட்கார்ந்து இருந்தேன். தருமத்துப்பட்டி பெரிய பாலத்திற்கு அருகில் எதிரே வந்த டிராவல்ஸ் வாகனம் எங்கள் வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது. அந்த விபத்தில் எங்களுடன் வந்த சுந்தரமூர்த்தி, செல்வராஜ் ஆகியோர் சம்பவ இடத்தில் இறந்துவிட்டார்கள். எனக்கு இடது முழங்கால், இடது உள்ளங்கை, நெற்றி ஆகிய இடங்களில் காயம் ஏற்பட்டது. ஒரு வார காலம் திண்டுக்கல் அரசு மருத்துவனையில் உள்நோயாளியாக சிகிச்சை பெற்றேன். எதிரியை எனக்கு தெரியாது. பதட்டத்தில் நான் எதிரியை பார்க்கவில்லை. போலிசார் என்னை விசாரித்தாரர்கள்.

**எதிரி தரப்பு குறுக்கு விசாரணை**

முதல் விசாரணையில் சொன்ன சங்கதிகளை தான் போலிசார் விசாரணையிலும் சொல்லியுள்ளீர்கள் என்றால் சரிதான். நீங்கள் வண்டியில் உட்கார்ந்து இருந்தபோது

எதிரே வரும் ரோடு மற்றும் வாகனம் தெரியாது என்றால் சரிதான். உடனடியாக 407 வாகனத்தை தடைத்திறன் அழுத்தியதால் இந்த விபத்து ஏற்பட்டது என்றால் சரிதான். உங்களுக்கு ஏற்பட்ட காயம் நபர்கள் நெருக்கமாக இருந்ததால் தள்ளுமுள்ளால் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 407 வாகனத்தில் உள்ள பின்பக்க கதவு சாத்தாமல் இருந்ததால் விபத்து ஏற்பட்டபோது, நிலை தடுமாறி கீழே விழுந்ததால் தான் காயம் ஏற்பட்டது என்றால் சரியல்ல. 407 வாகனத்தில் 20 நபர்களுக்கு மேல் நீங்கள் சென்றீர்கள் என்றால் சரிதான்.

**Sd/-Thiru.S.Anbuthasan**
District Munsif cum Judicial Magistrate
Athoor